வலயக்கல்வி அலுவலகம் கல்முனை

விவசாயமும் உணவுத் தொழினுட்பமும். (81/T/I,II).

(ஒருமணித்தியாலம்) . மேலதிக வாசிப்பு (பத்து நிமிடம்)

பகுதி 1

எல்லா வினாக்களுக்கும் விடைதருக.

1).இலங்கையின் புரதான நர்பாசனத் தொழினுட்பத்தின் நிர்மானிப்பாகத் குலத்தினைக் குறிப்பிடலாம் அனுராதயூகத்தின் முதன் முதலில் அமைக்கப்பட்ட குளம்.

1 .பராக்கிரம் சமூத்திரம். 2. சேனநாயக்க சமூத்திரம். 3. அபய வாவி 4. நுவர வாவியாகும்.

2). காய்கறிப்பயிர்கயைப் பயிரிடுவதற்கு சாடிகளைத் தயார் செய்யும் போது சாடியின் நீர் வடிப்பை மேற்கொள்ள செய்யும் நடவடிக்கை.

1 .சாடியின் அடியில் துளையிட்டு செங்கல் துண்டுகளை இடுதல். 2. இலையுற்கல்படையை இடுதல். 3. மேல்மண்படையை இடுதல். 4. கூட்டெரு கலவையை இடுதல்.

3.)மண் இளைய அமைப்பைத் துணிவதற்குற்கென மண் மாதிரியை ஓரளவு ஈரமாக்கி உள்ளங்கையில் வைத்து உருண்டையாக்க முயன்றபோதும் அவ்லாறு செய்ய முடியவில்லை. இம் மண்மாதிரி.

1 .களி மண்ணாகும். 2.மணல் மண்ணாகும் 3.களி இருவாட்டி மண்ணாகும் 4.மணல் இருவாட்டி மண்ணாகும்.

4) மண் பக்கப் பார்வையில் அதிகளவு மண் நுண்ணங்கிகளைக் கொண்ட வலயங்கள்/படைகள் எவை.

1. O,A 2.A,B 3.B,C 4.C,R

5)மண் துணிக்கை இடைவெளியான நண்துளை பெருந்துளை இடைவெளியில் மண் நீர் மண்வளி ஆகியன காணப்படும்.பயிர்ச்செய்கைக்குப் பொருத்தமான மண்ணழல் காணப்பட வேண்டிய மண் துளைவெளிச் சதவீதம்.

1.30 % ஆகும் 2. 40 % ஆகும் 3.50 % ஆகும் 4.60 % ஆகும்

6.)காலநிலைப் பரமானங்களை அளவிடப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் பற்றிய சரியான கூற்றினைத் தெரிக. 1.எளிய மழைமானியின் மூலமாக மழைவீழ்ச்சியின் கனவளவை மட்டும் இளக்கலாம்.

2.மழைமானி நிலமட்டத்திலிருந்து 1.5m உயரத்தில் நிறுவப்பட வேண்டும்.

3.ஈர உலர் குமிழ் வெப்ப மானியின் உவர் குமிழ் வாசிப்பு ஈரக் குமிழ் வாசிப்பை விட எப்போதும் குறைவாக காணப்படும்.

4 .சூரிய கதிர்ப்பு மானி மூலமாக ஒளி நிலவும் கால அளவை அளவிடலாம்.

7).இலங்கையின் விவசாயக் காலநிலை வலயங்கள் பல்வேறு குறியீடுகள் மூலம் காட்டப்படும் WU, IM எனும் குறியீடுகள் மூலம் காட்டப்படுவன.

1 .தாழ் நாட்டு ஈரவலயமும் தாழ்நாட்டு இடைவலயமும்.

2.மேல்நாட்டு இடைவலயமும் மத்திய நாட்டு இடைவலயமும்.

3. மேல் நாட்டு உலர்வலயமும் தாழ்நாட்டு ஈரவலயமும்.

4 .மேல்நாட்டு ஈரவலயமும் மத்திய நாட்டு இடைவலயமும்.

8).கத்தரித் தாவரத்தின் இலைகள் நரம்புகள் மட்டும் எஞ்சுமாறு வலையுருவாக இலைகள் அரித்து உண்ணும் பூச்சி. 1.அவுலக்கப் போரா ஆகும் 2.குக்கர் பிற்றே பழ ஈயாகும் 3.எபிலக்னாவாகும். 4.பழ ஈயாகும்.

9). பின்வருவனவற்றில் துனை நிலம்பண்படுத்தலில் அடங்கும் செயற்பாடுகளை மட்டும் கொண்ட விடையைத் தெரிக.

1.செடியைச் சுற்றியுள்ள மண்ணை இழக்குதல் மண்ணுடன் பசளையைக் கலத்தல்

2.களைகட்டுப்பாடு செடியின் அடிப்பகுதிக்கு மண் அணைத்தல்

3.மண்பாளங்களை வெட்டி புரட்டுதல் சேதனப் பதாத்தங்களை மண்ணுடன் கலத்தல்.

4. புரட்டிய மண்பாளங்களை தூர்வையாக்கும் மட்டப்படுத்தி பாத்தியமைத்தல்.

10).பிடிங்கி நாட்டுவதை சகிக்காத பயிர்களின் வித்துக்களை நாற்றுமேடையில் இடுவதற்கு பொருத்தமானது.

1 .டபொக் நாற்றுமேடையாகும் 2.கூட்டு சாடி நாற்றுமேடையாகும்.

3 .பாத்தி நாற்றுமேடையாகும். 4. நெரிடோக்கோ நாற்றுமேடையாகும்.

11). வித்துக்களை நாட்டுவதற்கு முன்பாக நாற்றுமேடை ஊடகம் கிருமியழிக்கப்படுவதன் நோக்கம்.

1. வித்துக்கள் முளைப்பதை விரைவுபடுதலாகும். 2.பீடைத்தாக்கத்தை கட்டுப்படுத்தலாம்.

3.மண்ணின் நீர்வடிப்பை மேம்படுத்தலாகும்..

4.தாவரப் போசணைகளின் கிடைப்புத்தன்மையை அதிகரிக்கச் செய்யலாம்..

12).பயிர்ச் செய்கையின் போது பயன்படுத்தப்படும் நீர்பாசன முறைகளில் மிக வினைத்திறனானதும் செறிவானதுமான நீர்ப்பாசன முறையாக அமைவது.எது.

1.துளிமுறை நீர்பாசனம். 2 .பரவல்முறை நீர்பாசனம்.

3.பாத்திமுறை நீர்பாசனம். 4.தூவல் முறை நீர்பாசனம்.

13).நீர்வடிப்புக் குறைவினால் பயிர்ச் செய்கைக்கு ஏற்படத்தக்க நிலைமையானது

1.காற்றுவாழ் மண் அங்கிளின் குடித்தொகை அதிகரித்தல்.

2.பயிர்களின்வேர் சார்ந்த நோய்கள் குறைவடைதல்

3. பயிர் வேர்த் தொகுதி ஆழமாக வளர்தல்.

4.சேதனப் பதாத்தங்களின் பிரிகையால் மீதேன் வாயு உருவாதல்.

14).களைகள் பற்றிய பின்வரும் கூற்றுகளில் சரியான கூற்றுக்களைத் தெரிக.

A- அகன்ற இலைக் களைகளின் இலைகளில் வலையுருவான நரம்பமைப்புக் காணப்படும்.

B-புல்வகைக் களைகளில் நாருரு வேர்த் தொகுதி காணப்படும்.

C- அகன்ற இலைக்களைகளின் தண்டின் உட்பகுதி குழி கெதண்டதாகும்.

1..A,B 2. A,C 3. B,C 4. A,B,C

15)நிலக்கீழ்த் தண்டுகளைக் கொண்ட ஆனையருகு கோரை பொன்ற களைகளைக் கட்டுப்படுத்துவதற்கு பயன்படுத்த வேண்டிய களைநாசினி வகை எது.
1.தெரிவுக் களைநாசினி . 2.தொகுதிக்களை நாசினி 3.தொடுகைக்களை நாசினி. 4.சர்வ களைநாசினி.
16.குக்கர்பிற்றேசியே குடும்பப் பயிர்களின்காய்களுக்கு பொலுத்தீன் உறையால் மறைப்பிடுவதன் நோக்கம் யாது.
1.பழ ஈக்களினால் காய்களுக்கு ஏற்படும் சேதத்தை தவிர்த்தல். 2.காய்களின் பருமனை அதிகரிக்கச் செய்தல்.
3.காய்களுக்குரிய நிறத்தை கிடைக்கச் செய்தல். 4.காய்களில் ஒளித்தொகுப்பு நடைபெறுவதைத் தவிர்த்தல்.
17.பின்வருவனவறில் கூட்டெரு தயாரிப்புச் செயன்முறையை விரைவுபடுத்துவதற்கு மேற்கொள்ளத்தக்க மிகப் பொருத்தமான நடவடிக்கை யாது.
1.கூட்டெருத் தயாரிப்புக்கான மூலப்பொருட்களைப் பொலித்தீன் விரிப்பின் மீத குவித்து வைத்தல்.
2.கூட்டெரு குவியலை புரட்டும் கால இடைவெளியை அதிகரிக்கச் செய்தல்.
3.வளியுடன் தொடுகையுறாத வகையில் கூட்டெரு குவியலைக் கறுப்பு பொலித்தீனால் மூடுதல்.
4.பயன்படுத்தப்படும் மூலப்பொருடகளை சிறு துண்டுகளாக வெட்டுதல்..
18.சேற்றைக் கழுவிய விவசாயி நாடாளவும் உகந்தவர் எனும் கூற்றை கூறியவர் .
1.மகா பராக்கிரம பாகு அரசன். 2. எழுத்தாளர். றொபட் நொக்ஸ் .
3.ஆளுனர் றொபட் பிறவுண்றிக் 4.மகாசேன அரசன்.
19. வளிமண்டலத்தின் சாரிரப்பதனானது பயிர்ச்செய்கையினை பாதிக்கும் வானிலை பரமானங்களுள் ஒன்றாகும் ஈரப்பதன் அதிகரிப்புடன்.
1தாவர நோய்கள் அதிகரிக்கும் 2.வெட்டுத்துண்டங்களில் வேருருவாதல் அடக்கப்படும்.
3.வித்துக்களின் சேமிப்புக் காலம் அதிகரிக்கும். 4.பூச்சிப்பீடைகளினாலான சேதம் குறைவடையும்.
20.உலர் வானிலை நிலைமையின் போது சாடியொன்றில் தாபிக்கப்பட்ட சில மிளகாய்த் தாவரங்கள் ஆரம்பத்தில் வாடி பின் காய்ந்து விட்டன இந்நிலையில் சாடியில் உள்ள மண்ணில் அடங்கியிருக்கக் கூடியது.
1.மயிர்த்துளை நீர் மடடும். 2.பருகு நீர் மட்டும்
3.புவிற்பு நீர் மற்றும் பருகு நீர் மட்டும் 4.மயிர்த்துளை நீர் மற்றும் பருகு நீர் மட்டும். 21.ஒரு சாய்வான நிலத்தில் அதிக வேகத்தில் வழிந்தோடும் மழை நீரினால் மண்துணிக்கைகள் காவப்படுவதனை இழிவாக்கும் மிகச்சிறந்த வழி. 1. மண்ணிற்கு சேதனப் பொருட்களை இடுதல். 2 .சமவுயரக் கோட்டு கற்களாலான கட்டை உருவாக்குதல். 3.மண்ணிற்கு மூடுபடையீடுதல். 4. களைகளை வேருடன் பிடுங்குதல்.
22.மண்ணின் கூழ்மம் அல்லது கூழ்நிலை ஒரு மண்ணின் போசனைத்தன்மையை பேணுவதில் முக்கிய பங்குவகிக்கின்றது.மண்ணில் காணப்படும் கூழ்மங்கள்.
1. களி மற்றும் உக்கல். 2 .களி மற்றும்அடையல்.
3.மணல் மற்றும்அடையல் 4.அடையல் மற்றும் உக்கல்.
23.மண்ணிலிருந்து மேலதிக நீரை அகற்றுவதற்கு விரைந்து நீரை அகத்துறிஞ்சி ஆவியுயிர்பினால் அதிகளவில் நீரை இழக்கும் தாவரங்களை நடுகைசெய்யலாம் இதற்கு தகுந்த தாவரங்கள்.
1 .கரும்பு ஆகும். 2. தென்னை ஆகும் . 3. கள்ளி ஆகும். 4.பனை மரமாகும்.
24.பயிர்களில் அதிகரித்த விளைச்சலைப் பெறுவதற்காக இரசாயனப் பசளையிடுவது.
1. கடும் மழைக்காலங்களிலாகும். 2.மண்ணானது கடுமையாக உலர்ந்துள்ள போது.
3.மண்ணானது ஓரளவுஈரலிப்பு உள்ள போது. 4.மண்ணிலுள்ள பதாத்தங்களின் அளவுகுறைந்துள்ள போது.
25.A.  உட்குழிவு B.  A,B ஆகியன இரு களைகளினது தண்டுகளின் குறுக்கு வெட்டு தோற்றத்தைக் காட்டுகின்றது. A,B இருதாவரங்களும் முறையே .
1.குப்பைமேனி சீதேவியார் செங்களு நீர். 2.சேறுபடாச் செல்வன். மஞ்சல் கோரை.
3.கோரை கினிப்புல் 4.கீரை ஆனையறுகு.
26. தாவரங்களுக்கு அத்தியாவசியமாக அமையும் மா மூலகங்களை மட்டம் பொண்ட தெரிவு எது.
1.காபன் .ஐதரசன். நைதரசன் 2. காபன் .ஐதரசன். போரன்
3.ஒட்சிசன் .பொசுபரசு .புளோறின. 4.கல்சியம் .மங்கனீசியம். நாகம்.
27.பூச்சி பீடை கட்டுப்பாட்டில் முக்கியத்துவம் பெறும் இயற்கை எதிரிகளை மட்டும் கொண்ட தெரிவு எது.
1.தும்பி .செவ்வெறும்பு .சுண்ணாம்பு மூட்டு பூச்சி 2.பனிப் பூச்சி .கும்புடப் பூச்சி .சிலந்தி.
3. செவ்வெறும்பு. சிலந்தி. கும்புடப் பூச்சி. 4.லேடிபெட் வண்டு .வெண் ஈ .அழுக்கணவன்.
28. பின்வரும் நீர்பாசன முறையில் மிக அதிகளவு நீர் தேவைப்படும் முறையாக அமைவது
1.சால் நீரப்பாசனம். 2.பரல் நீரப்பாசனம். 3.பாத்தி நீரப்பாசனம். 4.தூவல் நீரப்பாசனம்.
29. நெற் தாவரத்தின் தாவரவியற் ஒெயரை சரியாகக் கொண்ட விடை சரியாகக் காட்டப்படுவது.
1Oryza sativa L 2.Oryza sativa 3.Orzysati L 4.Oryza sativa.
30.செங்கபில நிறமானதும் பளிங்காகக் காணப்படுவதும் நீரில் நன்கு கரையக் கூடியதுமான இரசாயனப் பசளை
1.யூறியாவாகும். 2.மும்மை சுப்பர் பொசுபேற்றாகும்.
3.மியுறியேற்றுப் பொட்டாசாகும். 4.பாறைப் பொசுபேற்றாகும்.

31.காய்கறிகளிலும் .பழங்களிலும் .அந்துரொக்நோசு நோயை உருவாக்கும் நோயாக்கி பங்கசு .
1.பியுசேரியம் 2.றைசொக் ரோனியா 3.பித்தியம் 4.கொலெற்ரோரைக்கம்

32.மெம்படுத்திய நெல் இனங்களுடன் ஒப்பிடும் போதுஇலங்கையில் உள்ளுர் நெல் இனங்கள் தொடர்பான சரியான கூற்று எது.
1.அவை சாய்தலுக்கு தாக்குப்பிடிக்கக் கூடியவை. 2.அவற்றின் விளைச்சல் மிக அதிகம்.
3.இவற்றை உண்பதால் ஆரோக்கியம் பேணப்படும். 4.இரசாயனப் பசளைகளுக்கு நன்கு துலங்கலைக் காட்டக்கூடியன.
33.ஓடிகள் மூலம் இனப்பெருக்கம் செய்யக்கூடிய தாவரங்களுக்கு உதாரணம்.
1.உருளைக்கிழங்கு .மற்றும் சின்ன வெண்காயம். 2. வல்லாரை மற்றும் ஸ்ரோபெரி.
3.கங்குன் மற்றும். வெண்காயம் 4.பொன்னாங்காணி மற்றும் ம்ளைக் கீரை
34.பின்வரும் பொருட்களுள் தரம் மிக்க பசுந்தாட் பசளையாகப் பயன்படுத்தமிகப் பொருத்தமான பொருளானது.
1.உலர்ந்து விழும்பாய்ந்த இலைகளாகும். 2.நன்கு முதிர்ந்த பசிய தாவர இலைகளாகும்.
3.இளம் இப்பில் இப்பில் இலைகள். 4.அரை முதிர்ச்சி நிலை கொண்ட கிளிசிறிடியா இலைகளாகும்.
35.பயிர்களுக்கு ஏற்படும் கிழ்பூங்சண நோய் துரு நோய் ஆகிய வற்றுக்கான நோய்க்காரணி எது.
1.பற்றிரியா. 2.பங்கசு 3.வைரசு 4.பைற்றோபிளாஸ்மா.
36.சான்றுப்படுத்தப்பட்ட விதை நெல்லில் காணப்பட வேண்டிய ஆகக்குறைந்த முளைதிறன் வீதம்.
1. 85 % 2 90 % 3. 95 % 4. 99 %
37.



( பக்கவடிகால்).

(பிரதான வடிகால்.) பயிர்செய் நிலத்திலிருந்து மேலதிக நீரை அகற்றுவதற்கென இடப்படும் வடிகாற் தொகுதி உருவில் காட்டப்பட்டுள்ளது.இது.
1.கிருட்டு அயன் முறையாகும் . 2.செயற்கை முறையாகும்.
3.கெரிங் மீன் முள்ளு முறையாகும். 4.கொடொல் வடிகாலாகும்
38. மண்ணில் புதைக்கப்பட்ட நுண்துளை கொண்ட மட்குடத்தை பயன்படுத்திபின்வரும் எப்பயிருக்கு வெற்றிகரமாக நீர்பாசனம் செய்யலாம்..
1.குரக்கன் 2.மிளகாய் 3.மிளகு 4.சலாது.
39.பயிர்களை நாட்டிய பின் அம்மண்ணுக்கு மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளும் எவ்வாறு அழைக்கப்படும்.
1.பின் கண்காணிப்பு நடவடிக்கைகள் 2.முதற் பண்படுத்தல் 3.இடைப்பண்படுத்தல். 4.இழிவுப்பண்படுத்தல்.
40.வெண்டியில் ஏற்படும் இலைச் சித்திரவடிவு நோயினைக் கட்டுப்படுத்த பயன்படுத்தக் கூடாது.
1.பங்கசு நாசினி 2.விதைப் பரிகரணம் செய்தல்.
3.பூச்சி காவிகளைக் கட்டுப்படுத்தல். 4.மண்ணை தொற்று நீக்குதல்

விவசாயமும் உணவுத் தொழினுட்பமும். (81;T/I,II).
(இரண்டு மணித்தியாலம்) . மேலதிக வாசிப்பு (பத்து நிமிடம்)
பகுதி . 11

முதலாம் வினா உட்பட மேலும் நான்கு வினாக்களைத் தெரிவு செய்து மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

1.நச்சுத்தன்மையற்ற சமநிலையான ஓர் உணவுவேளையைப் பெற்றுக் கொள்வதற்கு தனது வீட்டுத் தோட்டத்தில் வெவ்வேறு உணவுப் பயிர்களைப் பயிர் செய்வது முக்கியமானதாகும் .

i. வீட்டுத் தோட்டத்தோட்டம் ஒன்றில் பயிர்களை தாபிப்பதற்கு.

a.நாற்றுமேடையில் நடப்படும் மரக்கறிப் பயிர்கள் இரண்டு தருக.
b. வயலில் நேரடியாக விதைமூலம் நடப்படும் மரக்கறிப் பயிர்கள் இரண்டு தருக.

ii. வீட்டுத்தோட்டத்தில் வளர்பதற்கு பொருத்தமான.

a. சொலனேசியே குடும்பப்பயிர் இரண்டு தருக.
b பபேசியே குடும்பப்பயிர்கள் இரண்டு தருக.

iii. துணைப்பண்படுத்தல் செயற்பாடுகள் இரண்டு தருக.
iv.இலங்கையில் எக்காலத்திலும் அறுவடை செய்யக்கூடிய பழப்பயிர்கள் இரண்டு தருக்.
v.இடைப்பண்படுத்தல் செயற்பாடுகள் இரண்டு தருக.
vi

a. முட்கம்பி வேலியில் படரக்கூடிய கொடிப்பயிர்கள் இரண்டு.
b. நீர் வழிந்தோடாத இடதடதில் வளரும் இலை மரக்கறிப்பயிர்கள் இரண்டு.

vii. வீட்டுத் தோட்டத்திலே பூச்சி பீடைகளைக் கட்டுப்படுத்துவதன் பொருட்டு வளர்க்கப்படும் தாவரங்கள் இரண்டைத் தருக.

viii . கத்தரிப்பயிரின் இலைகளில் இலைகளில் நரம்புகளுக்கு இடைப்பட்ட பகுதிகள் இரிக்கப்பட்டு வலைப்பின்னல் போல் காணப்படும்.

a. மேற்படி சேதத்தை ஏற்படுத்தக் கூடிய பீடையினை பெயரிடுக.
b அப்பீடையின் வாழ்க்கை வட்டத்தினைத் தருக.

ix மண்ணில் நீர் வடிதலை அதிகரிப்பதற்கு பயன்படும் இரண்டு வடிகால்களைப் பெயரிடுக.

x. மண்ணின் ph பெறுமானம் தீர்மானிக்கும் இரண்டு முறைகளைத் தருக.

2.பயிர் செய்கையில் மிக முக்கியத்துவம் பெறுவது காலநிலைக்காரணியும் .மண்ணுமாகும்.
1. கீழ் உள்ளவற்றில் பாதிப்பை ஏற்படுத்.தும் காலநிலைக் காரணிகள் இரண்டு வீதம் தருக.
a தாவர நோய்கள் அதிகரித்தல்.
b பூக்களில் மகரந்தச் சேர்க்கை
c ஆவியுயிர்ப்பு.
11. a பயிர் செய்கையில் மண்வளியின் முக்கியத்துவம் மூன்று தருக.
b. மண்ணிலுள்ள வளியை மேம்படத்த செய்ய வேண்டிய இரண்டு செயற்பாடுகளைத் தருக.
111. மண் இழையமைப்பின் முக்கியத்துவம் இரண்டு தருக.

3. பயிர் செய்கையில் போசனை மிகவும் அவசியமான ஒன்றாகும்.
1.a. சேதனப் பசளை நான்கு தருக.
b. சேதனப் பசளையை இடுவதால் ஏற்படும் அனுகூலங்கள் நான்கு தருக.
11. நைதரசன் அடங்கிய இரசாயனப் பசளை இரண்டினைத் தந்து. அவற்றின் இயல்புகள் இரண்டு தருக.
111. நைதரசன் குறைபாட்டறிகுறிகள் நான்கு தருக.
4. 1. காய்கறிப் பயிர்களுக்கு மேலதிகமாக செய்கை பண்ணக் கூடிய பிற உணவுப் பயிர்த் ˙தொகுதிகள் நான்கு தருக.
11. நாற்று மேடை அமைக்க இடத்தைத் தெரிசெய்யும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் நான்கு தருக.
111. நாற்றுமேடைகளில் ஏற்படும் நாற்றழுகல் நோயைத் தவிர்க்கும் நடவடிக்கைகள் நான்கு தருக.
5. மண்ணரிப்பு காரணமாக விவசாயத்துறை பாரிய இழப்புக்களை தொடச்சியாக சந்தித்து வருகின்றது.
1. மண்ணரிப்புச் செயன்முறையின் படிமுறைகள் மூன்றினைத் தருக.
11. மண்ணரிப்புக்காரணிகள் நான்கு தருக.
111. மண்ரிப்பின் பாதகமான விளைவுகள் நான்கு தருக.
6. 1. நிலம் பண்படுத்தலின் நோக்கங்கள் நான்கு தருக.
11. பாத்திவகைகள் நான்கு தருக.
111. இடைப்பண்படுத்தல் என்றால் என்ன ? இதன்போது நடைபெறும் செயற்பாடுகள் நான்கு தருக.

7. 1 குளத்தினுடைய படம் வரைந்து ஆறு பகுதிகளைக் குறிப்பிடுக.
11. விவசாயம் என்னும் கருப்பொருளின் விளக்கம் யாது.
111. இவங்கை சுதந்திரமடைந்த பின்னர் விவசாயக் குடியேற்றங்கள் மற்றும் பல் நோக்கு அபிவிருத்தித் திட்டங்கள் நடைபெற்றது. அவ்வாறான திட்டங்கள் நான்கு தருக.

வலயக்கல்வி அலுவலகம் கல்முனை

விவசாயமும் உணவுத் தொழினுட்பமும். (81 ;T/I, II). 2024

பகுதி 1

புள்ளித்திட்டம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | 11 | 2 | 21 | 2 | 31 | 4 |
| 2 | 1 | 12 | 1 | 22 | 1 | 32 | 3 |
| 3 | 2 | 13 | 4 | 23 | 1 | 33 | 2 |
| 4 | 1 | 14 | 1 | 24 | 3 | 34 | 4 |
| 5 | 3 | 15 | 2 | 25 | 2 | 35 | 2 |
| 6 | 1 | 16 | 1 | 26 | 1 | 36 | 1 |
| 7 | 4 | 17 | 1 | 27 | 3 | 37 | 1 |
| 8 | 3 | 18 | 2 | 28 | 2 | 38 | 3 |
| 9 | 4 | 19 | 1 | 29 | 1 | 39 | 3 |
| 10 | 4 | 20 | 2 | 30 | 3 | 40 | 4 |

40 புள்ளிகள் ˙1x40